[1982 மார்ச் 31

தமிழ் பல்கலைக்கழகம் மூலம் தமிழ் நூல்களைத் தயாரித்து வெளியிடும் திட்டம்

*வினா எண் 591 திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் நூல்களைத் தயாரித்து வெளியிடும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ் பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல்களை வெளியிடுவதற்காக புத்தக வெளியீட்டுத்துறை ஒன்றை ஏற்படுத்தி இயக்குநர் ஒருவரை நியமனம் செய்து தனியாக அச்சகம் அமைத்து இப்பணியினை ஆற்ற தொடக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே' மருத்துவம், பொறியியல் படிப்பிற்கான பாடத் திட்டங்களைத் தமிழ்மொழி மூலமே நடத்த முடியும் என்றும், அதற்கான பாட நூல்களை ஓராண்டு காலத்திற்குள் தமிழில் எங்களால் தர முடியும் என்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம் சொல்லியிருக்கிறது எனவே, இது போன்று தமிழ் பல்கலைக் கழகம் ஆர்வத்தோடு முன்வருகிற காரணத்தால், தமிழ் மொழியிலேயே அந்தப் பாடங்களைப் பயிற்றுவிக்கும் அந்த முயற்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கையை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பொறியியல் ஆங்கில மருத்துவம் ஆகிய துறைகளில் பாட நூல்களையும், ஏனைய அடிப்படை நூல்களையும் உருவாக்கி வெளியிடும் முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. அதை வெளியிட்ட பிறகு, அதைப் பயன்படுத்தி தமிழில் இத்தகைய படிப்புகளை, உயர்கல்விப் படிப்புகளை நடத்தித் தரும் முயற்சியை அரசு மேற்கொள்ளும். அது எப்படி என்பதைப் பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை சரஸ்வதி மகாலில் இருக்கும் ஓலைச் சுவடிகளை குறிப்பாக மராட்டிய ஓலைச் சுவடிகளை புத்தகமாக வெளியிட தமிழ் பல்கலைக் கழகத்தின் பணி பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுவும் ஒரு திட்டமாக இருக்கிறது. ஓலைச்சுவடிகள் கைப்பிரதிகள் ஆகியவற்றில் இது வரையில் அச்சிடப்படாதவைகளை, அச்சிடுவதற்குத் தொகுத்துத் தர தக்கவர்களை விரைவில் நியமிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 மார்ச் 31]

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் பல்கலைக் கழகத்தில் தயாரிக்கும் பலதரமான நூல்களையும், தமிழில் உள்ள தொன்மை வாய்ந்த தமிழ் அறிஞர்களின் நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, தமிழ் மொழியில் பெருமையையும், தமிழ் அறிஞர்களின் திறமையையும் உலகெங்கும் பரப்புவதற்கான முயற்சிகளையும் தமிழ் பல்கலைக் கழகம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தமிழ் பல்கலைக் கழகம் யோசித்து தக்க முடிவு எடுக்கும். ஆனால் பல்கலைக் கழகத்தின் வாயிலாக ஆங்கிலத்திலும், தமிழிலும் (வாரம்) திங்கள் இதழ் ஒன்றும் மாத இதழ் ஒன்றும் வெளிவரயிருக்கிறது. அதன் மூலமாக இத்தகைய நூல்களைப் பற்றி பலரும் தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தமிழ் பல்கலைக் கழகத்தினுடைய தமிழ் வளர்ச்சி பணி வரையறுக்கப்பட்டு விட்டதா ? அதில் தமிழ் நூல்களை வளர்க்கும் பணிகளுக்கு முன் உரிமை கொடுக்கப்படுகிறதா அல்லது தொல் பொருள் ஆராய்ச்சி என்று சொல்வார்களே, அது போல, தமிழ் வளர்ச்சி பற்றிய பழைய நூல்களையும் இலக்கியங்களையும், இலக்கணங்களையும் ஆராய்வதற்கு முன் உரிமை வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சட்டம் ஒரு மசோதாவாக இந்தச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து, இந்தச் சட்டமன்றத்தில்தான் எல்லா வரைமுறைகளையும் செய்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை பதினென்கீழ்க்கணக்கு போன்ற நூல்களை வெளியிடுகையில் தனியார்கள் 150 ரூபாய் பெறுகின்ற புத்தகங்களை 100 ரூபாய்க்கு கொடுப்பதோடு, மொத்தமாக வாங்குவதினால், ஒரு புத்தக ஸ்டேண்டையும் இலவசமாகக் கொடுக்கிற திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை தமிழ் பல்கலைக் கழகமும் ஏற்பாடு செய்து, இது போன்ற தமிழ் நூல்கள் எல்லோருக்கும் விநியோகிக்கப்படுவதற்கான திட்டத்தைச் செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில், தனியார்கள் செய்து வருகிற வேலைகளின் மூலமாக நடைபெறுகிற சில காரியங்களில், தேவையானால்தான் நாம் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டுமே தவிர, அவர்களே நல்ல முறையில் செய்துக் கொண்டிருப்பார்களேயானால், நாம் வீணாக இதிலே இறங்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 667 தள்ளிவைக்கப்பெறுகிறது.

பவானி ஆற்றிலிருந்து மேட்டுப்பாளையம் முதலிய ஊர்களுக்கு குடிநீர் வழி செய்யும் திட்டம்

, வினா எண். 668—திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஆற்றிலிருந்து பி. மேட்டுப்பாளையம், கவுந்தப்பாடி, சலங்கபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) பி. மேட்டுப்பாளையம், கவுந்தம்பாடி, சலங்கபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அந்த பேரூராட்சிகளின் நிதி நிலைமை காரணமாக கைவிடப்பட்டது.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம்

வினா எண். 669—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மத்திய அரசின் துணையோடு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நகரங்கள் எவை, எவை ?

(ஈ) செவிட இருக்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) :—ஒரு விரிவான அறிக்கை * அவையின்முன் வைக்கப் பட்டுள்ளது.

---

*752-755ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.